**செ.வெ. எண்: 268** **நாள்: 09.05.2011**

இவ் ஆண்டு 12 –ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவ – மாணவியர் தங்களது மதிப்பெண் பட்டியலை பெறும் நாளிலேயே அவர்களது மேல்நிலைக் கல்வித் தகுதியினை பதிவு செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. மாணவ – மாணவியர் தங்களுடைய கல்வி தகுதியை ஆண்லைன் மூலம் தாங்கள் பயின்ற பள்ளியின் வாயிலாகவே பதிவு செய்துகொள்ளலாம்.

மாணவ – மாணவியர் தங்களது மதிப்பெண் சான்றிதழை பெற பள்ளிக்கு செல்லும் பொழுது தங்களுடைய குடும்ப அட்டையினை உடன் எடுத்து செல்ல வேண்டும். அக்குடும்ப அட்டையினில் பதிவுதாரரின் பெயர் இருப்பதனை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

பத்தாம் வகுப்பு கல்வி தகுதியினை வேலை வாய்ப்பு அலுவலகத்தில் ஏற்கனவே பதிவு செய்துள்ளவர்கள் வேலை வாய்ப்பு அலுவலக அடையாள அட்டையையும் உடன் எடுத்துச் செல்ல வேண்டும்.

தற்பொழுது புதியதாக பதிவு செய்வோருக்கு உரிய பதிவெண்ணும் வழங்கப்படும்.

பதிவுதாரர்கள் மாற்று திறனாளிகளாக இருப்பின் தங்களுடைய கல்வித் தகுதியை பள்ளியில் பதிவு செய்த பின்னர் தங்கள் முன்னுரிமையை மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ளளாம்.

இதனால் கடந்த காலங்களில் தேர்வு முடிவு வெளியிடுவதனையொட்டி ஒரே நாளில் பல்லாயிரம் பேர் வேலை வாய்ப்பு அலுவலகங்களை நாடுவதன் மூலம் ஏற்படும் கூட்ட நெரிசல் மற்றும் கால விரையம் ஆகியவை முற்றிலும் தவிர்ப்பதற்காக பள்ளிகளின் வாயிலாகவே ஆன்லைன் மூலம் பதிவு செய்து கொள்ள இத்தகைய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது என வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குநர் தெரிவித்தார்.

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**